Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.57/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW7** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயக்குமார் |
| Father/Husband Name | : | முனியாண்டி |
| Village | : | கோட்டைமேடு, |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | பரோட்டோ மாஸ்டர் |
| Religion | : | |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025

2ம் எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் நகர் கோட்டைமேட்டில் வசித்து வருகிறேன். இராமநாதபுரம் சிகில் ராஜ வீதி அப்துல்லா மருத்துவமனைக்கு எதிரே பரமக்குடி புரோட்டா கடையில் புரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். மேற்படி கடையின் உரிமையாளர் முரளி , அ.சா.1 இராஜேந்திர பிரசாத் எங்கள் கடைக்கு புரோட்டா சாப்பிட வருவார் அதனால் எனக்கு தெரியும், இறந்துபோன சுந்தரத்தை தெரியும். இவ்வழக்கில் எதிரிகளான இறந்துபோன இராஜ்கபுர் மற்றும் ஆஜர் எதிரி சிவாவை தெரியும். எங்கள் கடைக்கு எதிரில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் எதிரிகள் இருவரும் ஆட்டோ ஓட்டி

வந்தார்கள் அதனால் எனக்கு தெரியும். 06.11.2009ம் தேதி இரவு 10.30 மணியளவில் நான் பரமக்குடி புரோட்டோ கடையில் மாஸ்டராக வேலை பார்த்து கொண்டிருந்தபோது இறந்து போன சுந்தரமும், பிரசாத்தும் இருசக்கர வாகனத்தில் வந்து எங்கள் கடையில் டிப்பன் கேட்டார்கள். நாங்கள் அதற்கு கடை அடைக்கும் நேரமாகிவிட்டது என்று சொல்லிக்கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் பெட்டிக்ககடை அருகில் வழக்கின் எதிரிகளான ராஜ்கபூரும், சிவாவும் நின்று கொண்டிருந்தார்கள் அப்போது மேற்படி இருவரும் இவ்வழக்கின் அசா.1 இராஜேந்திர பிரசாத்தும் சுந்தரமும் இருசக்கர வாகனத்தில் எதிரிகள் இருவர் மீது மோதும் படி வந்ததால் எதிரிகள் இருவரும் புகார்தாரர்களையும் அவருடன் வந்த சுந்தரத்தையும் பார்த்து ஏன் என் மீது மோதுவது போல் வந்தீர்கள் என்று வாக்குவாதன் ஆனது. அப்போது எதிரிகளுக்கும் புகார்தாரர்களுக்கு கைகலப்பு ஆகிவிட்டது. அப்போது பெட்டி கடை அருகில் இருந்த ரீப்பர் கட்டையை எடுத்து எதிரிகள் இருவரும் இறந்துபோன சுந்தரத்தையும், பிரசாத்திற்கு தலையில் அடித்து இரத்த காயம் ஏற்படுத்தினார்கள். அப்போது பிரசாத் சந்திற்குள் ஓடிவிட்டார். அப்போது இறந்த சுந்தரம் எதிரிகளை பார்த்து ஏன் பிரசாத்தை அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரிகள் சுந்தரத்தையும் ரீப்பர் கட்டையால் அடித்தார்கள். அதனால் ரீப்பர் கட்டையில் இருந்த ஆணி சுந்தரத்தின் தலையில் பட்டு மூளை சிதறி வெளியே வந்து விட்டது. கீழே விழுந்த சுந்தரத்தை எதிரிகள் மாறி மாறி அடித்தார்கள். இதை பார்த்த நான் என்னுடன் பணிபுரிந்த மணி, மற்றும் அருகில் டீக்கடை மாடக்கொட்டான் கிராமத்தினை சேர்ந்தவர் ஆகியோர் மேற்படி சம்பவத்தினை பார்த்தோம். அதன் பிறகு எனக்கு பயமாகிவிட்டதால் கடையை அடைத்து விட்டு நாங்கள் வெளியே சென்றுவிட்டோம். ஆஜர் எதிரிகள் இவ்வழக்கில் இறந்து போன சுந்தரத்தையும், பிரசாத்தையும் தாக்கிய ரீப்பர் கட்டைகள் இதுதான். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.